# ஓ, மிருதுவான இரட்சகரே, என்னைக் கடந்து சென்றுவிடாதேயும்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

குருடனான பர்த்திமேயு அந்த வாசலில் உட்கார்ந்து கொண்டு பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். இயேசு அந்த வழியே போகவிருக்கிறார் என்பதை அவன் அறிந்து கொண்டான். அவன் முதலில் ஒரு சத்தத்தைக் கேட்டான். இயேசு அவ்வழியே கடந்து சென்று கொண்டிருந்தார். "யார் கடந்து செல்கின்றது?" என்று அவன் கேட்டான். யாரோ ஒருவர் அவனைக் கீழே தள்ளி உட்கார வைத்தார். அவனோ, "யார் கடந்து செல்லுகின்றது என்பதை தயவு செய்து தெரியப்படுத்தவும்" என்று கெஞ்சினான்.

அப்பொழுது ஒரு பெண் - அவருடைய சீஷப் பெண்மணி ஒருத்தியாக இருக்கக் கூடும் - "யார் கடந்து செல்கின்றது என்று தெரியவில்லையா?" என்று கேட்டிருப்பாள்.

அவன், இல்லை, யாரோ ஒருவர், "கல்லறை முழுவதும் பிணக் குவியலாக இருக்கிறதே. நீர் மரித்தோரை உயிரோடெழுப்பினது உண்மையானால், அங்கு சென்று அவர்களை உயிரோடெழுப்பும் என்று சொல்லக் கேட்டேன். அது யார்? தேவதூஷணக்காரனா?" என்று கேட்டான்.

அவள், “நசரேயனாகிய இயேசு என்றழைக்கப்படும் அந்த வாலிப தீர்க்கதரிசியைக் குறித்து நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? அவர் கலிலேயாவிலிருந்து வரும் தீர்க்கதரிசி” என்றாள்.

அவன், “இல்லை” என்று பதிலளித்தான்.

“நமது வேதத்திலும், புத்தகச் சுருளிலும், தாவீதின் குமாரன் தோன்றி சிங்காசனத்தில் வீற்றிருப்பார் என்று எழுதப்பட்டுள்ளதே! அவர் தான் இவர்”.

“அவர் தானா? கடந்து செல்வது அவர் தானா?” அவனுக்குள் எழுந்த பதறல், “இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்” என்று கூச்சலிடச் செய்தது.

*ஓ, மிருதுவான இரட்சகரே, என்னைக் கடந்து சென்றுவிடாதேயும்*

*என் எளிமையான கூக்குரலைக் கேட்டருளும்*

*மற்றவர்களை நீர் சந்திக்கும் போது*

*என்னைக் கடந்து சென்று விடாதேயும்*

“ஓ, இயேசுவே”.

அங்கிருந்த சிலர், “வாயை மூடு, நீ அதிகமாக சத்தமிடுகிறாய்!” என்றனர்.

81. அவனோ பதறினான். அவர் கடந்து சென்றுவிட்டால் ஒருக்கால் அவனுக்கு வேறொரு தருணம் கிடைக்காமல் போகலாம். நமக்கும் கூட இன்னுமொரு தருணம் கிடைக்காமல் போகலாம். ஒருக்கால் இது கடைசி இரவாய் இருக்கக்கூடும். அவன் பதறல் கொண்டு, “ஓ, இயேசுவே” என்று கதறினான். வாயை மூட அவனிடம் யார் கூறின போதும், அவன் இன்னும் அதிகமாக சத்தமிட்டான். அவன் பதறினான். யாரும் அவனை நிறுத்தவே முடியவில்லை. அவன் “தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்” என்று பதறினான்.

82. அப்பொழுது தேவனுடைய குமாரன், உலகத்தின் பாவங்களைத் தன் தோள்களின் மீது சுமந்தவராய், தம்மையே பலியாக அர்ப்பணிக்க எருசலேமை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். அவனுடைய கூக்குரலைக் கேட்டதும் அவர் நின்றுவிட்டார். பதறும் கூக்குரல் தேவனுடைய குமாரனை நிறுத்தி, “நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறாய்?” என்று கேட்கச் செய்தது.

"ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்".

"நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது".

அது போதும், பதறல் ஏதாவதொன்றைப் பெற்றுக்கொள்ள அவசியமான நேரம் வரும்போது, விசுவாசம் அதை இறுகப் பற்றிக் கொள்கிறது. பாருங்கள்? பர்த்திமேயு, "சற்று பொறுங்கள், சற்று பொறுங்கள். என்னால் பார்க்க முடிகின்றதா என்று பார்க்கலாம். அநேக ஆண்டு காலமாக என் கைகளை நான் பார்த்ததேயில்லை. இப்பொழுது பார்த்திருக்க முடிகின்றதா என்று பார்க்கலாம். என்னால் பார்க்க முடியவில்லையே!" என்று அவன் கூறவேயில்லை.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது", என்று இயேசு கூறினதே அவனுக்குப் போதுமாயிருந்தது. அதுதான் அவனுக்குத் தேவையாயிருந்தது.

*செய்தி:* **பதறல்,** செப்டம்பர் 1, 1963